முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

2026–ம் ஆண்டு **ஏப்ரல்** மாதம் 08–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.3–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.275/2024**

**வா.சா:–3 (குமார்)**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்):–**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் தறி ஓட்டிவருகிறேன். சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு சம்மன் வந்ததா என்றால் இல்லை. என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் நான் சொன்ன விவரங்களை கொண்டு வாதியின் வழக்கறிஞர் தயார் செய்தார். நான் சாட்சி சொல்ல வாதி என்னை அழைத்துவந்தாரா என்றால் ஆமாம். வாதி எனக்கு உறவினரா அல்லது நண்பரா என்றால் நண்பர் ஆவார். வாதியை எனக்கு எவ்வளவு வருடங்களாக தெரியுமென்றால் 15, 16 வருடங்களாக தெரியும். வாதியை எப்படி தெரியுமென்றால் இடம் விற்ற வகையில் தெரியும். தாவா சொத்து கிரயம் பெறப்பட்ட 2010–க்கு முன்பாக வாதி என்ன தொழில் செய்துவந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு யார் யாருக்கிடையே நடக்கிறது என்றும், என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதிக்கும், அவரது கணவருக்குமிடையே வீட்டு பிரச்சினை சம்மந்தமாக வழக்கு போட்டுள்ளார். பிரதிவாதி என்ன தொழில் செய்துவருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கும், பிரதிவாதிக்குமிடையே எந்த வருடம் திருமணமானது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியும், பிரதிவாதியும் ஈரோட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதியும், பிரதிவாதியும் ஒன்றாக வாழ்ந்து வந்த சமயத்தில் அவர்கள் குடும்ப வரவு–செலவுகள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீடு எந்த வருடம் கட்டப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் நான் 2010–ல் இடத்தை விற்றேன். அதன் பிறகு வீடு கட்ட தொடங்கிவிட்டார்கள். தாவா சொத்தில் வீடு கட்டிய பிறகு வாதியும், பிரதிவாதியும் ஒன்றாக வசித்துவந்த

விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டை கட்டுவதற்கான பணத்தை பிரதிவாதி கொடுத்த விவரத்தை வாதி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டில் தற்போது பிரதிவாதியின் பெற்றோர்கள் தான் குடியிருந்துவருகிறார்கள் என்றால் அந்த விவரம் தெரியாது. வாதியும், பிரதிவாதியும் எத்தனை வருடங்கள் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி நடத்திவந்த நிறுவனத்தில் வாதி வேலை பார்த்துவந்து பிரதிவாதியுடன் காதல் ஏற்பட்டு இருவரும் திருமணம் செய்துகொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி பிரதிவாதியிடம் பணிபுரிந்தபோது குறைவான சம்பளமாக மாதம் ரூ.2,000/- பெற்றுவந்தார் என்றும், அந்த விவரம் வாதியின் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை கிரயம் வாங்குமளவிற்கு வாதிக்கு வருமானம் இல்லையென்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டை கட்டுவதற்கான அனைத்து செலவுகளையும் பிரதிவாதி தான் செய்தார் என்றால் தெரியாது. தாவா சொத்தின் கிரய ஆவணமானது பெயரளவில் தான் வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் வாதி சத்தியபிரியா தான் முழு கிரைய தொகையையும் எனக்கு கொடுத்தார். என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் இந்த வழக்கிற்கு எந்த விதத்திலும் தொடர்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டப்பட்டவர் என்பதால் வாதி கேட்டுக்கொண்டதின் பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் முற்றிலும் தவறானது என்றும், ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |